[2013 ஏப்ரல் 25

307—

வணிக வளாகம்

***7292—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சியில் வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சியிலுள்ள பேருந்து நிலையத்தில் 12 கடைகளுடன் வணிக வளாகம் ஒன்று இயங்கி வருகிறது. மேலும், அந்தப் பேருந்து நிலையத்தின் தரை தளத்தில் 7 கடைகளும், ஓர் உணவகமும் மற்றும் முதல் தளத்தில் 7 கடைகளும், ஆக மொத்தம் 15 கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. புதிதாக வணிக வளாகம் கட்டுவதற்கு பேரூராட்சிக்குச் சொந்தமான இடங்கள் ஏதுமில்லை. இந்நிலையில் பேரூராட்சிப் பகுதியில் புதிய வணிக வளாகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செல்வச் செழிப்பில் பிறந்து, சர்ச் பார்க்கில் படித்து, இசை, நடனம், நாட்டியம், கலை, இலக்கியம் என்னும் பன்முகத் திறமைகளின் ஜொலிப்பாய்த் திகழ்ந்து, இவை அனைத்தையும் தமக்காக இல்லாமல் தமிழகத்தின் மேன்மைக்காக அர்ப்பணித்து,*

2013 ஏப்ரல் 25]

தன்னையே தந்திட்ட, தன்னலம் துறந்திட்ட தூய வாழ்வால், ஒப்பில்லா தம் உயர் உழைப்பை தமிழகத்திற்குத் தந்து, எல்லா நிலைகளையும் உயர்த்திய இன்றைய தமிழகம், நாளைய பாராளும் பாரதத் தாய் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவடிகளை வணங்குகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சியில் 1991–1996–ல் புதிய பேருந்து நிலையம் அருகில் சுமார் 10 கடைகளைக் கொண்ட வணிக வளாகம் தாட்கோமூலம் கட்டப்பட்டது. இந்த இடம் பேரூராட்சிக்கும், கட்டடம் தாட்கோவிற்கும் சொந்தமானது. 1996–ல் ஆட்சிக்கு வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசால் அந்தக் கட்டடம் திறக்கப்படவும் இல்லை; பயன்பாட்டிலும் இல்லை; பராமரிப்பு இல்லாமல் சேதமடைந்துவிட்டது. எனவே, அந்தக் கட்டடத்தை இடித்துவிட்டு, அதே இடத்தில் புதிய வணிக வளாகம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய கவனத்திற்கு எடுத்துச் சென்று, புதிய கட்டடம் கட்டித் தருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த 1991–1996–ல் தாட்கோமூலமாகக் கடைகள் கட்டப்பட்டன என்று கூறியிருக்கிறார். அந்தக் கடைகள் ஆதி திராவிட மக்களுக்காக, அவர்களும் பேரூராட்சிகளில் முக்கியப் பகுதிகளில் கடைகளை வைப்பதற்குரிய நல்ல வாய்ப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும், அவர்களும் தொழில் முனைவோர்களாக ஆகவேண்டும், கடைக்கு சொந்தக்காரர்களாக வரவேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நகராட்சியினுடைய மையப் பகுதிகளில், பேருந்து நிலையங்களில் இதுபோன்ற கடைகளை அந்தச் சமூகத்திற்காகக் கட்டிக் கொடுத்தார்கள். ஆதி திராவிட மக்கள்தான் அப்படி கொடுக்கப்பட்ட கடைகளுக்கான ஏலத்தில் முழுவதுமாக பங்கு

கொள்ளவேண்டும். அவர்கள்தான் அதை ஏலத்தில் எடுக்க வேண்டும், அவர்கள்தான் கடை வைக்கவேண்டும் என்ற உத்தரவின் அடிப்படையிலே அந்தக் கடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படி கொடுக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் அது பழுதுபார்க்கப்பட்டு, மீண்டும் அவர்களுக்கேதான் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடம் முழுவதுமாக சேதமடைந்து, பழுதடைந்து இடிந்து விழுகின்ற நிலையில் இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்த இடத்தில் புதிய கட்டடம் கட்டித் தரவேண்டும். அப்படி இல்லையென்றால் வைத்தீஸ்வரன்கோவில் மேல வீதியில், 1974–ல் 'கட்டி' திறக்கப்பட்ட 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி, சுமார் 10 ஆண்டுகளாகப் பயன்பாட்டில் இல்லை. அதற்குப் பதிலாக 3 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி புதிதாகக் கட்டி பயன்பாட்டில் உள்ளது. எனவே, மேல வீதியில் உள்ள 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி உள்ள இடத்தை இடித்துவிட்டு, அதே இடத்தில் புதிய வணிக வளாகம் கட்டலாம் என்ற தகவலையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கனிவுடன் பரிசீலனை செய்து, அங்கு ஏற்கெனவே கட்டப்பட்டு இருக்கின்ற கட்டடம் பயன்பாட்டிற்கு இல்லாமல், அது பழுதுநீக்கம் செய்வதற்குக்கூட தகுதியில்லாமல் இருந்தால் நிச்சயமாக அதை மாற்றி, புதிய கடைகள் கட்டப்பட்டு, ஆதி திராவிட மக்களுக்கே மறு ஏலத்தில் அல்லது ஏற்கெனவே

2013 ஏப்ரல் 25]

இருக்கின்றவர்களுக்கு கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். மற்றொன்று, இன்னொரு இடத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி எந்தவிதப் பயன்பாடும் இல்லாமல் இருக்கிறது என்று கூறியிருக்கிறார். அந்த இடம் பேரூராட்சிக்குச் சொந்தமாக இருக்கின்றபட்சத்தில், பேரூராட்சி ஒரு தீர்மானத்தைப் போட்டு, அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை இடித்துவிட்டு ஒரு கருத்துருவை அனுப்பினால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட ஆளூர் பேரூராட்சியிலே எந்த* Development*–ம் இல்லை. அந்தப் பேரூராட்சிக்குச் சொந்தமாக இடம் வசதி இருக்கிறது. அந்தப் பேரூராட்சியில் ஒரு வணிக வளாகம் கட்டித் தந்தால் அந்தப் பகுதி வளர்வதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கருத்தின் அடிப்படையில் அங்கு இடம் இருக்குமானால், பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றுகின்றபட்சத்தில், அந்தப் பேரூராட்சிக்கு வருவாய் வரக்கூடிய பணிகள் அனைத்தையும் செய்யலாம். அங்கே ஒரு கட்டடம் கட்டி, கடைகளை வாடகைக்கு விடுகின்றபோது, அந்தப் பேரூராட்சிக்குக் கூடுதலாக வருமானம் வரும். அப்படி கூடுதலான வருமானம் வருவதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2013 ஏப்ரல் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரத்தில் பூமாலை வணிக வளாகத்தில் 26 கடைகள் கட்டப்பட்டு சுய உதவிக் குழுக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த 26 கடைகளில் 3 கடைகள் மட்டும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மீதமுள்ள 23 கடைகள் சுமார் 5 ஆண்டுகாலமாக பூட்டி வைக்கப்பட்டுள்ளன. இதனை மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடத்தில் ஒரு காய்கறி வளாகம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல அந்தக் கடைகள் சம்பந்தமாக ஏதேனும் வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தால் அது துரிதப்படுத்தப்படும் அல்லது கடைகள் பூட்டப்பட்டிருந்தால் அவை உடனடியாகத் திறக்கப்பட்டு, கடைகளை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, புவனகிரி பேரூராட்சியில் வணிக வளாகம் கட்டுவதற்கும், மீன் அங்காடி நடத்துவதற்கும் போதிய இடவசதி உள்ள காரணத்தால், அந்த இடத்தில் வணிக வளாகமும், மீன் அங்காடியும் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2013 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல அந்த இடம் இருக்கின்றபட்சத்தில் கூடுதலாக ஒரு வணிக வளாகம் கட்டுவதற்கும், அவ்வாறு கட்டப்படுகின்ற வணிக வளாகம் ஆக்கபூர்வமாக, இலாபகரமாக இயங்கக்கூடிய வகையில் இருந்தால், அதற்காக அந்தப் பேரூராட்சி தீர்மானம் போட்டு அனுப்புகின்ற நேர்வில், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு மீன் வணிக வளாகம் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே வேறு இடங்களில் மீன் வணிக வளாகங்கள் இருந்தால், அதனையும் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகராட்சியில் 2 பயணியர் விடுதிகள் இருந்தன. அவை வணிக வளாகங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. திருப்பூர் நகரம் சிறிய நகரமாக இருந்தபோது 2 பயணியர் விடுதிகள் இருந்தன. இன்றைக்கு, வியாபாரம், வர்த்தகம், வெளிநாட்டுத் தொடர்புகள் ஏற்பட்ட பின்னால், அங்கு நகராட்சிக்கான பயணியர் தங்கும் விடுதி இல்லை. எனவே, பயணியர் விடுதி கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய நகராட்சிகளில் இதுபோன்ற நகராட்சிக்குச் சொந்தமான பயணியர் விடுதிகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் ஒரு நியாயமான கோரிக்கையை

வைத்திருக்கிறார். இப்பொழுது திருப்பூர் வளர்ந்த நகரமாக, மாநகராட்சியாக மாறியிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலனை செய்து மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஒரு நல்ல முடிவு எடுத்து, பயணியர் விடுதியைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். என்னுடைய மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி வளர்ந்து வருகின்ற ஒரு பேரூராட்சியாகும். அந்தப் பகுதியில் காலை, மாலை நேரங்களில் மிகவும் இட நெரிசலாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியில் வியாபாரிகள் தெருவோரங்களில், சாலையின் ஓரத்தில் கடைகளை வைக்கின்ற காரணத்தினால், இட நெருக்கடி ஏற்படுகின்றது. மேலும், திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் அரசு இடம் இருக்கிறது. அந்த இடத்தில் ஒரு வணிக வளாகம் கட்டிக் கொடுத்தால் அந்த இட நெருக்கடியைப் போக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் இருக்கின்ற அரசு இடத்தில் ஒரு வணிக வளாகத்தை அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஊராட்சி ஒன்றியப் பகுதியாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். பேரூராட்சிப் பகுதிக்குச் சொந்தமாக இருக்கின்றபட்சத்தில்தான், இதுபோன்ற வணிக வளாகம் கட்டுவதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும்.*

2013 ஏப்ரல் 25]

ஊராட்சிப் பகுதிகளாக இருக்கின்றபோது, கிராம ஊராட்சிகளோடு சேர்ந்துவிடுகின்றது. கிராம ஊராட்சிகளோடு சேர்ந்துவிடுகிறபோது அங்கே பேரூராட்சியோ, நகராட்சியோ தலையிட்டு ஒரு வணிக வளாகம் கட்டுவதற்குரிய வாய்ப்பு குறைவாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஆய்வு செய்து அது ஊராட்சிப் பகுதியில் இருந்தாலும்கூட, அந்தப் பேரூராட்சிக்கு அருகில் இருக்கின்ற காரணத்தினாலும், மக்கள் நெருக்கம் கூடுதலாக இருக்கின்ற காரணத்தினாலும், ஊராட்சியின் சார்பாகவேகூட அங்கு ஒரு வணிக வளாகம் கட்டுவதற்குரிய நடவடிக்கை எடுக்கின்ற வாய்ப்பு இருக்கின்றபட்சத்தில், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 308, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

308—

கல்லூரிக் கட்டடம்

***33423—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேதாரண்யத்திலுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011—2012 ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தில் பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி தொடங்குவதற்கு அனுமதி வழங்கினார்கள்.